2012 ஆம் ஆண்டுக்கான

பொதுத் திறைசேரியின்

அரசிறைக் கொள்கைகள் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை

உள்ளடக்கம்

	பக்கம்
1. தொலைநோக்கும் பணித்திட்டக் கூற்றும்	3
2. பணிகள்	4
3. அரசிறைக் கொள்கைச் செயற்பாடு - 2012	5
4. 2012 ஆம் ஆண்டின் செயலாற்றுகை	14
5. நிர்வாகமும் கணக்குகளும்	25

தொலை நோக்கு

நிலைபேறான அரசிறைக் கொள்கையொன்று வகுத்தமைக்கப்படுவதை உறுதி செய்தல்

பணிக்கூற்று

அரசின் அகல் விரிவான அபிவிருத்திச் செயற்பாட்டு வரையறையினுள் அரசிறைக் கொள்கையை வகுத்தமைத்தலும் அமுல்படுத்தலும்

பணிகள்

- தனிப்பட்ட, அரசாங்க மற்றும் சர்வதேச பிரதிநிதிகளை ஒருங்கிணைத்து நடுத்தர கால வரவு செலவுத் திட்ட சட்டகத்தினுள் அரசிறைக் கொள்கையை வகுத்தமைத்தலும் அமுல்படுத்தலும்.

- வரிக்கொள்கை மற்றும் அதனோடு தொடர்பான பிற சட்ட ஏற்பாடுகளை தயாரித்தல். (சுங்கத்தீர்வை மற்றும் பிற விசேட பொருட்களுக்கான வரி நீங்கலாக)

- அரசாங்க வருமானம் மற்றும் பெறுகை உள்ளடங்கலாக அரசிறை எண்ணக்கருக்கள் மற்றும் அரசிறைச் செயற்பாடுகளினை முகாமை செய்தலும் விதப்புரை செய்தலும்.

- அனைத்து அறிக்கையிடல்களும் உள்ளடங்கியதாக அரசிறை முகாமைத்துவப் பொறுப்புச் சட்டத்தினை செயற்படுத்துதல்

1.அரசிறைக் கொள்கையின் செயலாற்றுகை – 2012

நடுத்தரக் கால அரசிறை முகாமைத்துவ வேலைச் சட்டகத்துடன் 2012 இல் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையில் காணப்பட்ட அர்ப்பணிப்பானது, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2011 இல் காணப்பட்ட 6.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 6.4 சதவீதமாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், இது 2012 வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்ட 6.2 வீத வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை இலக்கினை சிறிதளவு விஞ்சியுள்ளது. வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையானது, 2009 இல் 9.9 சதவீதத்திலிருந்து 2010 இல் 8.0 சதவீதமாகக் குறைவடைந்தது. உள்நாட்டுப் பொருளாதார செயற்பாடுகள் மற்றும் வரி விதிப்பனவு, கடன் கட்டுப்பாடு, 2010 மற்றும் 2011 வருடங்களில் விரிவாக்கப்பட்ட வர்த்தகப் பற்றாக்குறையினை சமாளிப்பதற்காக 2012 இன் ஆரம்பப் பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட நாணயமாற்று வீத நெகிழ்வுப் போக்கினால் வரி விதிக்கத்தக்க இறக்குமதிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியினால் மொ.உ.உற்பத்தியில் குறைவடைந்த அரசாங்க வருமானத்தினால் அரசாங்க செலவினம் குறைவடைந்ததன் காரணமாக தொடரான இந்த வீழ்ச்சிப் போக்கு 2012 இல் மூன்றாவது வருடமாக காணப்பட்டது.

அரசாங்கம் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை இலக்கிடப்பட்ட மட்டத்தில் வைத்துக்கொள்வதற்கு முடியுமாக இருந்தபோதும், 2012 இல் முழு மொத்த அரசிறை செயற்பாடுகளும் பல்வேறு சவால்களை எதிர் கொண்டன. மோட்டார் வாகனங்களின் இறக்குமதி 2011 அளவு அடிப்படையில் 533,056 இலிருந்து 374,175 ஆக பாரியளவு வீழ்ச்சியடைந்ததுடன் இவற்றின் பெறுமதியானது 2011 இல் 881 மில்லியன் ஐ.அ.டொலர்களிலிருந்து 2012 இல் 457 மில்லியன் ஐ.அ.டொலர்களாக குறைவடைந்தது. குறிப்பாக நிதிக் குத்தகை மற்றும் உள்நாட்டு வர்த்தக சேவைகளுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் இறக்குமதி வருமான வளர்ச்சியில் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தின. தனியார் கடன் துறையில் இறுக்கமான நாணயக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டதனால் உள்நாட்டுப் பொருளாதார செயற்பாடுகளில் அழுத்தம் ஏற்பட்டு உள்நாட்டுக் கொடுக்கல் வாங்கல்களை அடிப்படையாகக் கொண்ட வரிகளிலிருந்து கிடைக்கும் வருமான வளர்ச்சியினைப் பாதித்தது. மொத்த வருமான சேகரிப்பு 2011 இல் பதிவாகிய 14.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியில் 13.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.

குறிப்பாக 2012 இன் இரண்டாவது அரையாண்டில் ஒப்பீட்டு ரீதியில் உயர் சந்தை வட்டி வீதம் மற்றும் உயர் உள்நாட்டு கடன் பெறுகைகள் அத்துடன் நாணயமாற்று வீழ்ச்சி, அரசாங்கத்தின் வட்டிச் செலவு அதிகரிப்பு என்பன 2011 இல் 357 பில்லியன் ரூபாயிலிருந்து 408 பில்லியன் ரூபாவாக அதிகரித்தது. எவ்வாறாயினும், மொ.உ.உற்பத்தியில் சதவீதமாக வட்டியல்லாத நடைமுறைச் செலவினம் 2011 இல் பதிவாகிய 10.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2012 இல் 9.5 சதவீதமாக தொடர்ந்தும் காணப்பட்டது. இதற்குக் காரணம் தேசியப் பாதுகாப்புச் செலவினமானது 2009 இல் மொ.உ.உற்பத்தியில் 3.9 சதவீதத்திலிருந்து 2012 இல் 2.7 சதவீதமாகக் குறைவடைந்ததுடன் ஏனைய பொருட்கள் சேவைகள் மீதான செலவினம் மொ.உ.உற்பத்தியில் முன்னைய வருடத்தில் காணப்பட்ட 2.0 சதவீதத்திலிருந்து 1.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்தமை முன்னைய வருடத்தில் 15.7

சதவீதமாகப் பதிவாகியிருந்த நடைமுறை செலவினத்தினை 14.9 சதவீதமாக பேணுவதற்கு உதவியாக இருந்தது. வருமான வீழ்ச்சியுடன் வருமானப் பற்றாக்குறை அதிகரிப்பானது 2011 இல் 0.9 சதவீதத்திலிருந்து மொ.உ.உற்பத்தியில் 1.0 சதவீதமாக அதிகரித்ததுடன் அரசாங்க முதலீடு 2012 வரவு செலவுத்திட்டத்தில் இலக்கிடப்பட்ட 6.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியில் 5.9 சதவீதமாக முகாமை செய்யப்பட்டது.

முன்னைய வருடங்களைப் போன்று, பல்வேறு வரிக் கொள்கை மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. சர்வதேச சந்தையில் பெற்றோலியப் பொருட்களின் விலை வீழ்ச்சியடைந்ததும் 2012 இன் ஆரம்பத்தில் பெற்றோலிய உற்பத்திகளின் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை விலக்களிப்பானது குறைக்கப்பட்டது. அதேபோன்று உள்நாட்டு உற்பத்தியினை ஊக்குவிப்பதற்காக பால்மா மீதான வரி விலக்களிப்பு குறைக்கப்பட்டது. மோட்டார் வாகனங்களின் உதிரிப்பாகங்களுக்கான சுங்கத் தீர்வை அதிகரிக்கும் வகையில் திருத்தப்பட்டது. சில நுகர்வுப் பொருட்களின் மீதான விசேட நுகர்வுப் பொருள் அறவீடானது சர்வதேச விலைப் போக்கு மற்றும் உள்நாட்டு வழங்கல் நிலைமைக்கேற்ப மீன் மற்றும் மரக்கறி எண்ணெய் போன்ற புதிய நுகர்வுப் பொருட்களுக்கும் ஏற்புடைய வகையில் காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டதுடன் விசேட நுகர்வுப் பொருள் அறவீட்டு முறைமைக்குள் உள்வாங்கப்பட்டன. அதேவேளை, சில இறக்குமதிப் பொருட்களுக்கான செஸ் வரியானது உள்நாட்டுப் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை அதிகரித்ததுடன் அரசாங்க வருமானத்தினையும் அதிகரித்தது. இந்நடவடிக்கைகள் உள்நாட்டு பெறுமதி சேர்ப்பில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது. குறித்த ஆண்டின்போது வன் மதுபானம், பாகு மதுபானம் மீதான சுங்கத் தீர்வை அதிகரிப்பு இரண்டு தடவைகள் இடம் பெற்றதுடன் சிகரெட்டுகள் மீதான மதுவரியும் அதிகரிக்கப்பட்டது. எவ்வாறாயினும், வர்த்தகப் பற்றாக்குறை அதிகரிப்பினை இல்லாதாக்குவதற்கு மோட்டார் வாகனங்களின் இறக்குமதி மீது ஏற்புடையதான உற்பத்தித் தீர்வை அதிகரிப்பு வருமான வளர்ச்சியில் பாதகமான தாக்கமொன்றினை ஏற்படுத்தியது. மதுபானம் மற்றும் சிகரட்டுகள் மீதான மதுவரி அதிகரிப்பு உள்நாட்டுக் கேள்வியினை ஊக்கம் குன்றச்செய்ததுடன் வருமான வளர்ச்சியில் வலுவிழக்கச் செய்தது.

2012 இல் நடைமுறைச் செலவினம் 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10.4 சதவீதத்தினால் ரூபா 1,131 பில்லியனாக அதிகரித்தது. வட்டிச் செலவினம் 2011 இல் காணப்பட்ட ரூபா 357 பில்லியனுடன் ஒப்பிடுகையில் மொத்த நடைமுறைச் செலவினத்தில் 36.1 சதவீதமாக அதாவது ரூபா 408 பில்லியனாக காணப்பட்டதுடன் மொ.உ.உற்பத்தியில் 5.5 சதவீதத்திலிருந்து 5.4 சதவீதமாக சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. இது நாணயச் செலாவணி பெறுமதி இறக்கம், உள்நாட்டு வட்டி விகிதங்களின் அதிகரிப்பு, வருமான வீழ்ச்சி மற்றும் நாணயமாற்று விகிதங்களில் நெகிழ்ச்சியற்ற தன்மை அதேபோன்று மொத்த வெளிநாட்டு படுகடன் இருப்பில் சலுகைக் கடன் பங்குகளில் வீழ்ச்சி என்பவற்றினால் ஏற்பட்டதாகும். உயர் சம்பளங்கள் அதிகரிக்கப்பட்டமை மற்றும் அரசாங்க சேவையில் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட்டமை இடம்பெற்றபோதிலும் வட்டியல்லாத செலவினம் 2011 இல் ரூபா 668 பில்லியனிலிருந்து ரூபா 723 பில்லியனாக அதிகரித்தமை 8.1 சதவீத

அதிகரிப்பாகும். ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான பாதுகாப்புச் செலவின வீழ்ச்சி 2011 இல் ரூபா 43.4 பில்லியனிலிருந்து 2012 இல் ரூபா 32.6 பில்லியனாக காணப்பட்டமை நடைமுறைச் செலவினத்தினைக் குறைப்பதற்கு உதவியாக அமைந்தது. தொடர்ந்தும் மொ.உ.உற்பத்தியில் நடைமுறைச் செலவினமானது 2011 இல் 15.7 சதவீதத்திலிருந்து 2012 இல் 14.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. இது சாதாரண மொ.உ.உற்பத்தி வளர்ச்சியைவிட குறைவாக இருந்ததுடன் அரசிறை செயன்முறையினை உறுதிப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் செலவினத்தினை குறைப்பதற்கான முயற்சியின் விளைவாகும்.

அரசாங்கத்தின் வட்டியல்லாத நடைமுறைச் செலவினமானது முன்னைய வருடத்திலும் 8.1 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டபோதிலும், மொ.உ.உற்பத்தியில் 2011 இல் காணப்பட்ட 10.2 சதவீதத்திலிருந்து 9.5 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட அடிப்படைச் சம்பளத்தில் ஆகக்குறைந்தது மாதத்திற்கு 1,200 ரூபா என்ற அடிப்படையில் 5 சதவீதத்திலிருந்து 15 சதவீதம் வரைக்கும் வழங்கப்பட்ட விசேட கொடுப்பனவு கிராம சேவையாளர்கள், நீதிச்சேவை அலுவலர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் போன்றோருக்கு வழங்கப்பட்ட பல்வேறு கொடுப்பனவுகள் திருத்தப்பட்டதினாலும் சம்பள செலவினமானது ரூபா 320 பில்லியனிலிருந்து ரூபா 348 பில்லியனாக 8.8 சதவீதத்தினால் அதிகரித்தது. மாதமொன்றுக்கு ஓய்வூதியம் பெறுநர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,000 கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டமை 2011 இல் 23,447 புதிய ஓய்வூதியம் பெறுநர்கள் மற்றும் 2012 இல் 17,375 புதிய ஓய்வூதியம் பெறுநர்களினால் ஏற்பட்ட தாக்கம் 2011 இல் ரூபா 100 பில்லியனிலிருந்து 2012 இல் ரூபா 112 பில்லியனாக 11.7 சதவீதத்தினால் ஓய்வூதிய செலவினம் அதிகரித்தது. இதற்கமைவாக, சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியச் செலவினங்கள் 2011 இல் காணப்பட்ட ரூபா 420 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2012 இல் ரூபா 460 பில்லியனாகக் காணப்பட்டது.

தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் அரசாங்கத்தின் சமூக நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் மீதான செலவினம் 2012 ரூபா 39.7 பில்லியனாக காணப்பட்டது. இதில் ரூபா 14.8 பில்லியன் அங்கவீனமுற்ற படைவீரர்களுக்காகவும், ரூபா 10.6 பில்லியன் சமுர்த்தி மானியமாகவும் ரூபா 7.0 பில்லியன் பாடசாலை சீருடைகள், பாடப்புத்தகங்கள் மற்றும் போசாக்கு உணவு நிகழ்ச்சித் திட்டங்களுக்காகவும் ரூபா 7.3 பில்லியன் தேவையுடையவர்களுக்கான உதவியாகவும் வழங்கப்பட்டது. அதேவேளை, அரசாங்க நிறுவனங்களுக்கான மாற்றல்கள் ரூபா 34.9 பில்லியனாகக் காணப்பட்டதுடன் குறிப்பாக ஆளுக்குரிய வேதனாதிகளின் அதிகரிப்புக்காக இலங்கை புகையிரதம், தபால் திணைக்களம், இலங்கை போக்குவரத்துச் சபை என்பவற்றுக்கு அவற்றின் தொழிற்பாட்டு நட்டங்களை ஈடு செய்வதற்கு ரூபா 11.1 பில்லியன் செலவிடப்பட்டது.

அரசாங்க முதலீடு என்ற வகையில் 2012 இல் மொ.உ.உற்பத்தியில் 5.9 சதவீத ரூபா 444 பில்லியனை அரசாங்கம் செலவிட்டுள்ளது. இச்செலவினம் 2011 இல் ரூபா 416 பில்லியனாகக் காணப்பட்டது. வருமானப் பற்றாக்குறை உட்பட நெருக்கடியான நிதி நிலைமைகள் காணப்பட்டபோதிலும் மொ.உ.உற்பத்தியில் அரசாங்க

முதலீட்டினை வருடமொன்றுக்கு 6 சதவீதமாக பேணுகின்ற அர்ப்பணத்துடன் இம்முதலீடு மேற்கொள்ளப்பட்டது. 2002 இலிருந்து 2004 வரை 4.7 சதவீதமாகக் காணப்பட்டபோதிலும் 2005 இலிருந்து 2012 வரையான காலப்பகுதியில் அரசாங்க முதலீட்டினை மொ.உ.உற்பத்தியில் சராசரி 5.4 சதவீதமாகப் பேணுவதற்கு அரசாங்கத்தினால் முடியுமாக இருந்தது. அரசாங்க முதலீட்டில் நிலையான செலவினங்கள் தொடர்ந்தும் காணப்பட்டதனால் மின்வலு உற்பத்தி, துறைமுகங்கள், விமான நிலையங்கள், அதிவேக பாதைகள், பெருந்தெருக்கள், தேசிய நீர்வழங்கல் முறைமை, நீர்வழங்கல் மற்றும் துப்பரவேற்பாடு, பாடசாலைகள், வாழ்க்கைத் தொழில் பயிற்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், வைத்தியசாலைகள் மற்றும் சேவை வழங்கல் வசதிகள் என்பவற்றின் கொள்ளளவினை அதிகரிப்பதில் நிலையான முன்னேற்றத்தினை நாடு அடைந்து கொள்வதற்கு முடிந்தது. இதற்கமைவாக நாட்டின் மின் உற்பத்திக் கொள்ளளவானது 2002 இல் 2,231 MW இலிருந்து 2012 இல் 3,312 MW ஆக அதிகரிக்கப்பட்டதுடன் 2002 இல் காணப்பட்ட 3 துறைமுகங்கள் 2012 இல் 5 ஆக அதிகரிக்கப்பட்டதுடன் 2002 இல் காணப்பட்ட 1 சர்வதேச விமான நிலையம் 2012 இல் 2 ஆகவும் பாதை அடர்த்தி 2002 இல் சதுர கிலோ மீற்றருக்கு 1.68 கி.மீ. இலிருந்து 2012 இல் சதுர கிலோ மீற்றருக்கு 1.76 கி.மீ. ஆகவும் நீர் பகிர்வுக் கொள்ளளவு 2005 இல் 253 மில்லியன் கன மீற்றர்களிலிருந்து 2012 இல் 368 மில்லியன் கன மீற்றர்களாக அதிகரித்தது. இந்த முதலீடானது மின்சாரம் 84 சதவீதமாகவும் பாதுகாப்பான குடிநீர் 84சதவீதமாகவும் மக்களுக்கான அடைவினை அதிகரிக்கச் செய்ததுடன் போக்குவரத்து, கல்வி மற்றும் சுகாதார வசதிகளையும் பாரியளவில் கிடைக்கச் செய்தது.

வருமானக் கணக்கில் பற்றாக்குறை, மொத்த நடைமுறைச் செலவினம் மற்றும் மொத்த வருமானம் என்பவற்றுக்கிடையிலான இடைவெளி என்பன 2011 இல் ரூபா 57.0 பில்லியனிலிருந்து 2012 இல் ரூபா 79.6 பில்லியனாக காணப்பட்டது. மொ.உ.உற்பத்தியில் சதவீதமாக, வருமானப் பற்றாக்குறையானது 2011 இல் 0.9 சதவீதத்திலிருந்து 1.0 சதவீதமாக அதிகரித்தது. இது இறக்குமதிகளுடன் தொடர்புடைய வருமான வீழ்ச்சி மற்றும் உள்நாட்டு வருமான அடிப்படை காரணமாக ஏற்பட்டதாகும். 2011 இல் ரூபா 450 பில்லியனாகக் காணப்பட்ட மொத்த வரவு செலவுத்திட்ட பற்றாக்குறைக்கு எதிராக 2012 இல் ரூபா 489 பில்லியனாகவும் மொ.உ.உற்பத்தியில் 5.9 சதவீதமாக அல்லது ரூபா 444 பில்லியனாகவும் அரசாங்க முதலீடு காணப்பட்டதன் விளைவினால் அரசாங்கத்தின் முதலீடு விரிவாக்கப்பட்டது. எவ்வாறாயினும், மொ.உ.உற்பத்தியுடன் தொடர்புற்ற வகையில் 2011 இல் 6.9 சதவீதத்திலிருந்து 6.4 சதவீதமாகவும் 2009 இல் 9.9 சதவீதமாகவும் 2010 இல் 8.0 சதவீதமாகவும் காணப்பட்டது. எனினும் நான்காவது வருடமாக அரசாங்கத்தின் அரசிறை முகாமைத்துவத்தில் தெளிவான போக்கொன்றினைக் கொண்டதாக பற்றாக்குறை தொடர்ந்தும் வீழ்ச்சிப் போக்கில் காணப்பட்டது.

வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு நிதி அளிப்பதில் உள்நாட்டு மூலங்களிலிருந்து ரூபா 308 பில்லியன் (மொத்த நிதியளிப்பில் 63 சதவீதம் அல்லது மொ.உ.உற்பத்தியில் 4.1 சதவீதம்) பெற்றுக் கொள்ளப்பட்டது. வதிவல்லாத அரசாங்கப் பிணையங்களினால் முதலீடுகள் உள்ளடங்கலாக உள்நாட்டு தேறிய

நிதியளிப்பானது 2011 இல் ரூபா 25 பில்லியனிலிருந்து 2012 ரூபா 106 பில்லியனாக காணப்பட்டது. தேறிய பற்றாக்குறை நிதியளிப்பில் எஞ்சிய ரூபா 181 பில்லியன் (மொத்த நிதியளிப்பில் 37 சதவீதம் அல்லது மொ.உ.உற்பத்தியில் 2.4 சதவீதம்) வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது.

அரசாங்கப் படுகடனானது 2012 இன் இறுதியில் மொத்தமாக ரூபா 6,000.1 பில்லியனாக காணப்பட்டது. இது உள்நாட்டுப் படுகடன் ரூபா 3,232.8 பில்லியனையும் வெளிநாட்டுப் படுகடன் ரூபா 2,767.2 பில்லியனையும் உள்ளடக்கியுள்ளது. மொத்தப் படுகடன் மொ.உ.உற்பத்தியில் சதவீதமாக 2011 இல் 78.5 சதவீதத்தினை பதிவாக்கியுள்ளதுடன் 2002 இல் 105.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2012 இல் 79.1 சதவீதமாக காணப்பட்டது. 2012 இல் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை மொ.உ.உற்பத்தியில் 6.4 சதவீதமாக காணப்பட்டமையும் இது முன்னைய வருடத்தில் 6.9 சதவீதத்தினை பதிவாக்கி இருந்தது. ஒப்பீட்டு ரீதியில் 2011 இல் 8.2 சதவீத வளர்ச்சியினைவிட 2012 இல் மொ.உ.உற்பத்தியில் 6.4 சதவீத குறைந்த வளர்ச்சி காணப்பட்டது. இலங்கை ரூபாவின் மதிப்பிறக்கம் ஏனைய வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக உள்நாட்டு நாணயப் பெறுமதி தாக்கம் ரூபா 207.4 பில்லியனாகவும் வெளிநாட்டு நாணயத்தில் வெளிநாட்டு படுகடன் 2011 இல் 17.3 பில்லியன் ஐ.அ.டொலர்களுடன் ஒப்பிடுகையில் 18.6 பில்லியன் ஐ.அ.டொலர்களாகக் காணப்பட்டது.

மொத்த உள்நாட்டு படுகடன் மொத்த படுகடனில் 53.9 சதவீதமாக காணப்பட்டதுடன் 2012 இல் ரூபா 428.8 பில்லியனாக அதிகரித்தது. எவ்வாறாயினும், மொ.உ.உற்பத்தியில் சதவீதமாக உள்நாட்டு படுகடன் முன்னைய வருடத்தில் பதிவாகிய 42.8 சதவீதத்தில் 42.6 சதவீதமாக வீழ்ச்சி அடைந்தது. மொத்த உள்நாட்டு படுகடனில் ஏறக்குறைய 74.8 சதவீதம் அல்லது ரூபா 2,419.6 பில்லியன் 2 வருடத்தினை விஞ்சிய முதிர்ச்சிக் காலப்பகுதிக்குள் காணப்பட்டது. எஞ்சிய 25.2 சதவீதம் அல்லது ரூபா 813.3 பில்லியன் ஒரு வருடத்தினைவிட குறைந்த முதிர்ச்சிக் காலப்பகுதிக்குள் குறைந்த கால திறைசேரி உண்டியல்களாகக் காணப்பட்டன.

2012 இன் இறுதியில் மொத்தப் படுகடனில் 46.1 சதவீதம் வெளிநாட்டுப் படுகடனாகக் காணப்பட்டது. அரசாங்க மூலதனச் செலவினத்தில் வெளிநாட்டு நிதி பயன்பாட்டில் அதிகரிப்பு ஏற்பட்டதன் விளைவாகவும் வெளிநாட்டு நாணயங்கள் அதேபோன்று ரூபா மதிப்பிறக்கம் ஏற்படுத்திய தாக்கம் என்பவற்றினால் 2012 இல் வெளிநாட்டுப் படுகடன் ரூபா 438 பில்லியனாக அதிகரித்தது. மொ.உ.உற்பத்தியில் சதவீதமாக 2011 இல் பதிவாகிய 35.6 சதவீதம் 36.5 சதவீதமாக அதிகரித்தது. நாணயமாற்று விகிதம் மாத்திரம் ரூபா 207.4 பில்லியனாகக் காணப்பட்டதுடன் வெளிநாட்டு நாணயத்தில் மேலதிக கடன் பெறுகைகள் எதுவும் காணப்படாத போதிலும் வரவு செலவுத்திட்டத்தில் பொறுப்பினை ஏற்படுத்தியது.

1.1 அரசாங்க வருமானம்

மொத்த அரசாங்க வருமானம் 2011 இல் ரூபா 967.9 பில்லியனிலிருந்து 2012 இல் ரூபா 1,051.5 பில்லியனாக 8.6 சதவீதத்தினால் அதிகரித்தது. 2012 வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட வருமான இலக்குகளில் பற்றாக்குறை காணப்பட்டபோதிலும் முன்னைய வருடத்தினை விட வரி வருமானம் ரூபா 908.9 பில்லியன் (7.5 சதவீதம் அதிகரிப்பு) வரியல்லாத வருமானம் ரூபா 142.6 பில்லியன் (16.7 சதவீத அதிகரிப்பு) அதிகரிக்கப்பட்டமை காரணமாகும்.

பேரண்டப் பொருளாதார ஸ்திரத்தன்மையினை ஏற்படுத்துவதற்காக வேண்டி தெரிவு செய்யப்பட்ட பொருட்களின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு வரிகளை அதிகரித்தல், வட்டி விகிதங்களின் அதிகரிப்பு மற்றும் உயர்ந்த இறக்குமதிகளுடன் தொடர்பான வர்த்தகப் பற்றாக்குறை அதிகரிப்பினை முகாமை செய்வதற்கு 2011 இன் இறுதியிலிருந்து நாணயமாற்று விகிதத்தில் பாரிய நெகிழ்வுப் போக்கு காணப்பட்டவை போன்ற உள்நாட்டு கேள்விகளை அதிகரிக்கும் வகையில் தனியார் துறைக்கான கடன் வழங்கலினை வரையறுப்பதற்கு தனியார் துறை கடன் மீதான வரையறைகளை விதித்தல் என்பவற்றின் மூலம் அரசாங்கத்தினால் இவ்வருடத்தின் ஆரம்பத்தில் கடைப்பிடிக்கப்பட்ட உறுதியான கொள்கையின் பின்னணியில் 2012 இல் வருமான செயலாற்றுகை நோக்கப்படுதல் வேண்டும் இக்கொள்கை நடவடிக்கைகளினால் மோட்டார் வாகனங்களின் இறக்குமதி 495 மில்லியன் ஐ.அ.டொலர்களாக 43.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன் நுகர்வுப் பொருட்கள் 2,995 மில்லியன் ஐ.அ.டொலர்களாக 18.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதில் 2012 இல் உணவு மற்றும் குடிபானங்கள் 1,304 மில்லியன் ஐ.அ.டொலராக 16.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும், மொத்த இறக்குமதிகள் 2011 இல் 20.3 பில்லியன் ஐ.அ.டொலர்களிலிருந்து 2012 இல் 19.2 பில்லியன் ஐ.அ.டொலர்களாக வீழ்ச்சியடைந்தது. முதலீடுகள் மற்றும் நிர்மாணச் செயற்பாடுகளில் அண்மைக்கால அபிவிருத்திகள் காரணமாக முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி 4,590 மில்லியன் ஐ.அ.டொலர்களாக 7.0 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை இடைநிலைப் பொருட்கள் 11,570 மில்லியன் ஐ.அ.டொலர்களாக 5.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன் எரிபொருள் இறக்குமதி 5,037 மில்லியன் ஐ.அ.டொலர்களாக 5.0 சதவீதத்தினால் அதிகரித்தது. மோசமான உலகப் பொருளாதார நிலைமை காணப்பட்டபோதிலும் மேற்குறிப்பிட்ட கொள்கை நடவடிக்கைகளின் விளைவாக, 2011 இல் 10.5 பில்லியன் ஐ.அ.டொலரைப் பதிவாக்கிய ஏற்றுமதிகள் 2012 இல் 9.8 பில்லியன் ஐ.அ.டொலராக வீழ்ச்சியடைந்தது. தயாரிப்புத் துறையானது 2011 இல் 7.9 சதவீதத்திலிருந்து 2012 இல் 5.2 சதவீதமாக காணப்பட்டதுடன் உள்நாட்டு வர்த்தக சேவைகள் 2011 இல் 7.5 சதவீதமாகக் காணப்பட்டதுடன் 2012 இல் 6.8 சதவீதமாக சிறிதளவு வளர்ச்சியினை பதிவாக்கியது. மொ.உ.உற்பத்தி வளர்ச்சி 2011 இல் 8.2 சதவீதத்திலிருந்து 2012 இல் 6.4 சதவீத வளர்ச்சியினைக் காட்டியதுடன் வரி விதிக்கத்தக்க இறக்குமதிகள் உள்நாட்டுக் கேள்வி, தயாரிப்பு, உள்நாட்டு வர்த்தகச் செயற்பாடுகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து என்பவற்றின் வீழ்ச்சி காரணமாக வருமான உருவாக்கத்தினாலும் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியது. மொ.உ.உற்பத்தியில் சதவீதமாக மொத்த வருமானம் 2011 இல் 14.8

சதவீதத்தினை பதிவாக்கியதுடன் 2012 இல் 13.9 சதவீதத்தினை பதிவாக்கியுள்ளது. குறிப்பாக வரி வருமானம் 2011 இல் மொ.உ.உற்பத்தியில் 12.9 சதவீதமாகவும் 2012 இல் 12.0 சதவீதமாகவும் காணப்பட்டது.



1.2. அரசாங்க வருமானத்தின் மாறல் பகுப்பாய்வு – 2012 (ரூபா. மில்)

விடயம்	2011 உண்மை	2012 தற்காலிக	காரணம்
வருமான வரி	157,310	172,593	உயர்ந்த பூட்கை வட்டி வீதங்கள், கடன் வரையறைகள் மற்றும் நாணயச் செலாவணி விகிதத்தில் பாரிய நெகிழ்ச்சித்தன்மை என்பவற்றினூடாக வர்த்தகப் பற்றாக்குறையினை விரிவாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் தயாரிப்பு, தொலை தொடர்பாடல், காப்புறுதி மற்றும் குத்தகைக் துறை என்பன மதிப்பீட்டில் விலகல் ஏற்பட்டதன் காரணமாக பொருளாதார செயற்பாடுகளில் தாக்கத்தினை ஏற்படுத்தின. அரசாங்க ஊழியர்களுக்கான உ.பொ.செ.வரி அறிமுகப்படுத்தப்பட்டதுடன் உயர்ந்த வட்டி விகிதம் காரணமாக நிறுத்தி வைத்தல் வரி வருமானம் அதிகரிக்கப்பட்டு உயர்ந்த முதலீடுகள் தி.முறிகள், தி.உண்டியல்கள் என்பவற்றில் மேற்கொள்ளப்பட்டமையும் 2011 இன்போது வருமான வரி வருமானத்தை அதிகரிக்கச் செய்தன
			கொடுப்பனவு மீதி நெருக்கடிகளை நீக்குவதற்கு எடுக்கப்பட்ட கொள்கை நடவடிக்கை

பெறுமதி சேர் வரி	225,858	229,604	காரணமாக இறக்குமதிகளில் வீழ்ச்சியானது இறக்குமதிகள் மீதான பெ.சே.வரியினை பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது. உள்நாட்டு பொருளாதார செயற்பாடுகள் உள்நாட்டு பெ.சே.வரி வருமான மதிப்பீடுகளில் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியதனால் உள்நாட்டுப் பொருளாதார செயற்பாடுகள் வீழ்ச்சியடைந்து பெ.சே.வரி வருமான மதிப்பீட்டிலிருந்து விலகல் காணப்பட்டது. எவ்வாறாயினும் ஹோட்டல், உணவுச்சாலை, உணவு பகிர்வு சேவைகள் போன்ற சில துறைகளின் செயலாற்றுகை காரணமாக இலகுபடுத்தப்பட்ட பெ.சே.வரி முறைமை (SWAT) அறிமுகப்படுத்தப்பட்டதுடன் பெ.சே.வரி காசு மீள் கொடுப்பனவும் வீழ்ச்சியடைந்தமை 2011 இனைவிட 2012 இல் பெ.சே.வரி வருமானம் அதிகரிக்க உதவியது.
உற்பத்தி வரி	204,821	223,960	சிகரெட் விற்பனை, மதுபான உற்பத்தி, மோட்டார் வாகனங்கள் இறக்குமதி என்பவற்றில் வீழ்ச்சி காணப்பட்டபோதிலும் இந்த உற்பத்திகளுக்கான வரி விகித திருத்தங்கள் பல வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு பெற்றோல் மற்றும் டீசல் இறக்குமதி மீது வழங்கப்பட்ட தீர்வை விலக்கு குறைக்கப்பட்டமை இம்மூலங்களிலிருந்து மதிப்பிடப்பட்ட வருமானத்தை பெறுவதற்கு உதவியது.
இறக்குமதித் தீர்வை	79,811	80,155	உயர்ந்த சர்வதேச எண்ணெய் விலைகள் காணப்பட்டபோதும் சில தீர்வை விலக்களிப்பு பெற்றோல் மற்றும் டீசலுக்கு பேணப்பட்டதன் காரணமாக வரி விதி இறக்குமதியில் வீழ்ச்சி காணப்பட்டது. அதேபோல் விசேட நுகர்வுப் பொருள் அறவீட்டின் கீழ் பாம் எண்ணெய் மற்றும் மீன் என்பன சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன் மதிப்பிடப்பட்ட இறக்குமதித் தீர்வையில் விலகல் காணப்பட்டது. ரயர்கள், பால்மா என்பவற்றிற்கு விதிக்கப்பட்ட தீர்வை திருத்தங்கள் பெற்றோல் மற்றும் டீசல் மீது தீர்வை விலக்களிப்புகளை ஏற்படுத்தி 2011 இன்போது முழுமையான தீர்வை

			விலக்களிப்புக்கு உதவியதுடன் இம்மூலங்களின் மூலம் 2011 ஐ விட உயர்ந்த வருமானத்தினை பெற முடிந்தது.
துறைமுகங்கள், விமான நிலைய அபிவிருத்தி அறவீடு	66,028	70,111	மதிப்பீடுகளிலிருந்து உண்மையான வருமான விலகல் காரணமாக முழு மொத்த இறக்குமதியும் வீழ்ச்சியடைந்தது. 2011 ஐ விட சிறிதளவு வளர்ச்சி காணப்பட்ட இறக்குமதிப் போக்கு துறைமுக விமான நிலைய அறவீட்டினை அறவிடுவதற்கு பிரயோகிக்கப்பட்ட அடிப்படை மிகவும் சிறப்பாக வரையறுக்கப்பட்டிருப்பதுடன் விலக்களிக்கப்பட்டிருப்பதும் சான்றுகளாகும்.
தேசக் கட்டுமான வரி	35,667	38,736	உள்நாட்டு தொழிற்சாலை கைத்தொழில்களில் பாரியளவு வளர்ச்சியானது மதிப்பீடுகளில் தே.க.வரி வீழ்ச்சி காரணமாக ஏற்பட்ட இறக்குமதிகளிலும் தாக்கத்தினை ஏற்படுத்தியது. எவ்வாறாயினும், ஹோட்டல்கள், உணவு விடுதிகள், உணவுப் பகிர்வு போன்ற சேவைத்துறை விரிவாக்கமானது சுற்றுலாத்துறை அதிகரிப்புடன் வளர்ச்சியடைந்த அதேவேளை காப்புறுதி மற்றும் வங்கித்தொழில் செயற்பாடுகளின் சிறந்த செயலாற்றுகையும் 2011 ஐ விட வருமான வளர்ச்சிக்கு காரணமாக இருந்தன.
ஏனைய வரிகள்	76,202	93,754	பொருளாதாரம் எதிர்நோக்கிய பல்வேறு பாதகமான காரணிகள் காணப்பட்டபோதிலும் குறித்த வருடத்தில் விசேட நுகர்வுப் பொருள் அறவீடு, செஸ் வரி என்பவற்றில் மேற்கொள்ளப்பட்ட விகித திருத்தங்கள், வி.நு.அறவீட்டில் புதிய நுகர்வுப் பொருட்களையும் சேர்த்துக் கொண்டமை அதேபோன்று தொலைத்தொடர்பு அறவீட்டு வருமானம் அதிகரித்ததுடன் அத்துறையில் விரிவாக்கமானது மதிப்பீட்டு மட்டத்தில் வருமானத்தினைப் பேணுவதற்கு உதவிய அதேவேளை இம்மூலங்களிலிருந்து உயர் வருமானத்தினையும் பேண முடிந்தது.
வரியல்லாத வருமானம்	122,165	142,547	வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவம் மற்றும் தி.உண்டியல்களிலிருந்து வருமான அதிகரிப்பு மூலம் இலங்கை மத்திய வங்கியின் இலாப மாற்றல்கள் அதிகரித்ததுடன் மதிப்பீட்டினைவிட

			அதிகமாக வரியல்லாத வருமானம் சிறந்த செயலாற்றுகையினை காட்டியதற்கு உயர் வட்டி விகித வீழ்ச்சியினை குறிப்பிட முடியும். அரச வங்கிகள் மற்றும் லங்கா மினரல் சேன்ஸ் லிமிடெட், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் போன்ற நிறுவனங்களிலிருந்து இலாபங்கள் மற்றும் மாற்றல்கள் அதிகரிப்பு 2011 ஐ விட வரியல்லாத வருமானம் அதிகரிக்க காரணமாக அமைந்தது.

2. 2012 ஆம் ஆண்டின் செயலாற்றுகை

2.1 வருமானம் சேகரிப்பு செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள சகல திணைக்களங்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடல்.

பொருளாதார பகுப்பாய்வுகளின் அடிப்படையில், 2012 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் மொத்த வருமானம் 1,051.5 பில்லியன் ரூபாய்களாகும். இது 2011 ஆம் ஆணடில் அடையப் பெற்ற ரூபா பில்லியன் 967.9 உடன் ஒப்பிடும் போது அது 8.6 சத வீதத்தினால் அதிகரித்தது. அரசாங்கத்தின் மொத்த வருமானத்தில் வரி வருமானம் ரூபா 908.9 பில்லியனாக இருந்த அதே நேரம் வரியல்லாத வருமானம் ரூபா 142.5 பில்லியனாகக் காணப்பட்டது.



2.2. அரசாங்க வருமானப் பொழிப்பு

ரூபா. மில்

விடயம்	2011	2012
வரி வருமானம்	**845,697**	**908,913**
வருமான வரி	157,310	172,593
பெறுமதி சேர் வரி	225,858	229,604
தேசக் கட்டுமான வரி	35,667	38,736
உற்பத்தி வரி	204,821	223,960
இறக்குமதித் தீர்வைகள்	79,811	80,155
துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு	66,028	70,111
விசேட நுகர்வுப் பண்ட அறவீடு	15,622	33,666
ஏனையவை	60,580	60,088
வரியல்லா வருமானம்	**122,165**	**142,547**
வட்டி / வாடகை	13,426	11,686
இலாபங்களும் பங்கிலாபங்களும்	34,351	46,761
விற்பனைகளும் கட்டணங்களும்	37,292	26,019
சமூகப் பாதுகாப்பு பங்களிப்புகள்	12,628	11,738*
மத்திய வங்கி இலாப மாற்றல்கள்	22,000	43,000
பிற	2,468	3,343
மொத்த வருமானம்	**967,861**	**1,051,460**

** 2012 ஆம் ஆண்டில் மாகாண சபைகளிடமிருந்து பெறத்தக்க சமூகப் பாதுகாப்பு பங்களிப்பான ரூபா. 1,955 மில்லியன் இதில் உள்வாங்கப்படவில்லை.*

2.3 அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் அமுல்படுத்தப்பட்ட கொள்கை மாற்றங்களுக்கேற்ப வரி தொடர்பான சட்ட ஏற்பாடுகளைத் திருத்துதல்.

2.3.1 இத்திணைக்களத்தினால் 2012 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட வர்தமானி அறிவித்தல்கள் கீழ் வருமாறு:

i) உற்பத்தி வரி(விசேட ஏற்பாடுகள்) சட்டம்

- 1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம், 1747/01ஆம் இலக்க 2012.02.27 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல் -தெரிவு செய்யப்பட்ட உற்பத்தித் தீர்வை விதிக்கக் கூடிய மோட்டார் வாகனங்கள் மீது உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்)

தீர்வைக் கொடுப்பனவுகளை விலக்களித்தல், குறிப்பீடு செய்யப்பட்ட தீர்வை விதிக்கப்படும் பொருட்கள் மீதான உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சலுகை வழங்குதல்.

- 1989 இன் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம், 1751/28ஆம் இலக்க 2012.03.30 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல் -பயணிகள் போக்குவரத்துக்கான வாகனங்கள் மற்றும் பொருட்கள் போக்குவரத்துக்கான சில மோட்டார் வாகனங்கள் என்பவற்றின் உற்பத்தித் தீர்வையினை (விசேட ஏற்பாடுகள்) அதிகரித்தல்.
- 1989ன் 13ம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம், 1778/40 ம் இலக்க 2012.10.05 திகதிய வர்த்தமானி அறிவித்தல் - சிகரட்டுகள் மற்றும் ஏனைய புகையிலை உற்பத்திகள் மீது உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) தீர்வையினை அதிகரித்தல்.
- 1989ன் 13ம் இலக்க உற்பத்தி (வி‘ட ஏற்பாடுகள்) சட்டம், 1783/19 ம் இலக்க 2012.11.08 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல் - சிகரட்டுகள் மற்றும் ஏனைய புகையிலை உற்பத்திகள், மோட்டார் வாகனங்கள் மற்றும் ஏனைய பொருட்களின் மீது உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) தீர்வையினை அதிகரித்தல்.

ii) செஸ் வரி

- 1979ஆம் ஆண்டின் 40ம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்தி சட்டம், 1762/29 ஆம் இலக்க 2012.06.13ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல் - கிரணைட் கற்கள் ஏற்றுமதி தொடர்பிலான செஸ் வரி வீதத்தினையும் அலகுப் பெறுமதியினைத் திருத்தியமைப்பதற்குமாக ,
- 1979ஆம் ஆண்டின் 40ம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்தி சட்டம், 1764/05 ஆம் இலக்க 2012.06.27ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல்-குளிரூட்டப்பட்ட மரக்கறிகள், உலர்த்திய மரக்கறிகள்,அம்லாப்பழம், கோதுமை மா, பாகுப் பொருட்கள், இரும்பு கழிவுகள் மற்றும் இரும்புத்துண்டு இறக்குமதிகள் என்பவற்றின் செஸ் வரியினைத் திருத்துதல், உள்நாட்டு உற்பத்திக்கு ஒத்துழைப்பு வழங்கும் இரும்பு அல்லது உருக்கு துண்டங்கள், ரியூப்புகள், இரும்பு அல்லது உருக்குக் கம்பிகள் அல்லது குழாய்கள் மீதான செஸ் வரி விதிப்பனவு, குறைந்த தர இறக்குமதிகளைத் தடுத்தும் உள்நாட்டு உற்பத்தியினை ஊக்குவிப்பதற்காக.
- 1979ஆம் ஆண்டின் 40ம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்தி சட்டம், 1774/03 ஆம் இலக்க 2012.09.03ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல் - போஸ்லைன் மற்றும் அதற்கு நிகர்த்த மூலப் பொருட்கள் உள்ளடங்களாக ஓடுகள், துப்பரவு ஏற்பாட்டு பொருட்கள் (சிங், சிஸ்ரன்ஸ், ஸ்கொட்டிங் பான்ஸ் போன்ற), தளபாடங்கள் மற்றம் சமயலறைப் பொருட்கள் போன்ற உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் உயர் தர உள்நாட்டு உற்பத்திகளை பாதுகாக்கும் வகையிலும் தரம் குறைந்த பொருட்களின் இறக்குமதியினைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும் செஸ் வரியினை அதிகரிப்பதற்காகவும்.
- 1979ஆம் ஆண்டின் 40ம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்தி சட்டம், 1783/20 ஆம் இலக்க 2012.11.08ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல் - முதலீட்டுச் சபையின் கீழ் அல்லது சுங்க தயாரிப்பாளர் முறி மூலம் பதிவு செய்யப்பட்ட தொழில் முயற்சியினால் பெறப்பட்ட கழிவு ஏற்றுமதி மீதான செஸ் விலக்களிப்பு செய்தல், அல்லது ஏற்றுமதி பதனீட்டுக்கான தற்காலிக இறக்குமதித் திட்டத்தின் கீழ்(TIEP'), மூல இறப்பர் ஏற்றுமதி மற்றும் குறை பெறுமதி சேர்க்கப்பட்ட கனிய ஏற்றுமதிகள் என்பன மீது செஸ் வரியினை அதிகரிப்பதற்காக அல்லது அவற்றின் மீது செஸ் வரி விதிப்பனவு செய்வதற்காக
- 1979ஆம் ஆண்டின் 40ம் இலக்க ஏற்றுமதி அபிவிருத்தி சட்டம், 1783/21 ஆம் இலக்க 2012.11.08ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல் - தேசிய நலன் கருதி விசேட கருத்திட்டங்களுக்கான இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது செஸ் வரியினை விலக்களிப்பு செய்தல், மூலப் பொருட்கள் மீதான செஸ் வரியினைக் குறைத்தல், நீக்குதல்

மூலம் உள்நாட்டுத் தயாரிப்பாளர்களின் செலவினத்தைக் குறைத்தல். தனிப்பட்ட பாவணைக்கான உற்பத்திகளின் கிடைப்பனவினை அதிகரிப்பதற்கும் வகையில் சின்னம் பொறிக்கப்பட்ட உற்பத்திகள் மீது செஸ் வரியினைக் குறைத்தல். மற்றும் உள்நாட்டில் தயாரிக்க முடியுமான சில பொருட்களின் இறக்குமதிக்கான செஸ் வரி அதிகாத்தல் என்பனவற்றிற்காக

iii) மதுவரி

- இலக்கம்.947,948,949 மற்றும் 950 வரையான மதுவரி அறிவித்தல்கள்(2012.03.30 ஆந் திகதிய 1751/29 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) மதுபானம், மாவூரல், பனை, தெங்கு மற்றும் பதனிடப்பட்ட சாராயம், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு ஸ்பிரித்து மற்றும் பாகு மதுபானம் மீதான மது வரியினைத் திருத்துதல்.
- 951 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2012.03.30 ஆந் திகதிய 1751/30 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) மதுவரி உரிமம் பெற்ற நிறுவனம் ஒன்றினால் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் மற்றும் பிற பயன்பாட்டுக்கான, மருந்து உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் ஸ்பிரித்து (ஈதைல்) மதுபானம் மீதான மதுவரித் தீர்வையினை திருத்துதல்.
- இலக்கம்.952,953,954 மற்றும் 955 வரையான மதுவரி அறிவித்தல்கள்(2012.10.05 ஆந் திகதிய 1778/41 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) மதுபானம், மாவூரல், பனை, தெங்கு மற்றும் பதனிடப்பட்ட சாராயம், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு ஸ்பிரித்து மற்றும் பாகு மதுபானம் மீதான மது வரியினைத் திருத்துதல்.
- 956ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் (2012.10.05 ஆந் திகதிய 1778/42ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) மருந்து உற்பத்தி, கைத்தொழில் நடவடிக்கைகள், ஏற்றுமதிக்கான முடிவுப் பொருட்கள் உற்பத்தி என்பனவற்றிற்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் பயன்படுத்தப்படும் ஸ்பிரித்து (ஈதைல்) மதுசாரம் சுத்திகரிக்கப்படாத ஈதைல் அற்ககோல் மதுசார வகைகள் (தொழில்நுட்ப மதுசாரம் /பலம் குறைந்த மதுசாரம்) என்பனவற்றின் மீதான மதுவரித் தீர்வையினை திருத்துவதற்காக

iv) துறைமுகங்கள் மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீடு

- 2011 இன் 18 ஆம் இலக்க துறைமுக விமான நிலைய அபிவிருத்தி அறவீடு- (2012.05.09 ஆந் திகதிய 1757/3 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்- தெரிவு செய்யப்பட்ட தொழில் முயற்சி ஒன்றினால் இறக்குமதி செய்யப்பட்ட உபகரணங்கள் அல்லது பொறித்தொகுதிகள், மற்றும் சர்வதேசப் போக்குவரத்தினனை மேம்படுத்துவதற்காக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் என்பனவற்றிற்காக விலக்களித்தல் மற்றும் மருந்துப் பொருட்கள் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படும் மூலப் பொருட்கள் இறக்குமதிகள் மீதான கட்டளைகளை திருத்துதல்.
- 2011 இன் 18 ஆம் இலக்க துறைமுக விமான நிலைய அபிவிருத்தி அறவீடு- (2012.11.09 ஆந் திகதிய 1783/34 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்) -இலவச மருத்துவ சேவைகளை வழங்கும் சுகாதார நிறுவன் ஒன்றுக்கு நன்கொடையாக வழங்கப்படுகின்ற மருத்துவ உபகரணங்கள் இறக்குமதி செய்யப்டும் போது செலுத்தப்பட வேண்டியுள்ள துறைமுக விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டினை விட்டும் விலக்களிப்புச் செய்தல்,

குறிப்பிடப்பட்ட இயைபு முறை குறியீட்டின் கீழ் பொருட்களின் இறக்குமதிக்கு 2.5 சதவீத சலுகை விகிதத்தினை விதிப்பதற்காக துறை முக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி அறவீட்டினைத் திருத்தியமைப்பதற்காக.

v) நிதிச் சட்டத்தின் கீழான அறிவித்தல்

- 1963ன் 11ம் இலக்க நிதிச்சட்டம், 1790/15 ம் இலக்க 2012.12.28 திகதிய வர்த்தமானி அறிவித்தல் - நிதிச்சட்டத்தின் 58(4)ம் பிரிவின் (1), (2) மற்றும் (3)ம் உப பிரிவுகளின் ஏற்பாடுகளை கொழும்பு 7 ஹோட்டன் பிளேஸ் 112ம் இலக்கத்தில் அமைந்துள்ள 0.30926 ஹெக்டேயர் விசாலம் கொண்ட சீன மக்கள் குடியரசு தூதரகத்துக்கான இடத்தினை மாற்றுவதற்கு ஏற்புடையதாக மாட்டாது என வெளிப்படுத்துவதற்காக.
- 2003ன் 25ம் இலக்க நிதிச்சட்டம், 1791/08 ம் இலக்க 2012.12.31 திகதிய வர்த்தமானி அறிவித்தல, 2013 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு முன்மொழிவுகளுக்கமைய விமானம் மற்றும் கப்பலின் மூலம் இலங்கையினை விட்டு வெளியேறும் ஒருவரின் மீது விமானமேறல் அறவீட்டினைத் திருத்தியமைப்பதற்காக

vi) முத்திரை வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

- 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2012.04.04 ஆந் திகதிய 1752/17 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - அரசாங்கத்திற்கு வழங்கப்படும் ஏதேனும் பங்குச் சான்றிதழ் ஒன்றிற்கு முத்திரைத் தீர்வையிலிருந்து விலக்களித்தல்.
- 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (2012.05.09 ஆந் திகதிய 1752/04 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - அரசாங்கத்திற்கு செந்தான ஏதேனும் பங்கு ஒன்றினை மாற்றும் போது அல்லது கைமாற்றப்படும் போது ஏதேனும் பங்குச் சான்றிதழ் ஒன்றிற்கு முத்திரைத் தீர்வையிலிருந்து விலக்களித்தல்.
- 2006ன் 12ம் இலக்க முத்திரைத் தீர்வை (வி‘ட ஏற்பாடுகள்) சட்டம், 2012.10.04 திகதிய 1778/32 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - இலங்கை அரசாங்கத்திற்கு சொந்தமான அல்லது 2008ன் 14ம் இலக்க வி‘ட அபிவிருத்தி கருத்திட்ட சட்டத்தின் கீழ் இலங்கையில் முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையை கைச்சாதிட்ட கம்பனியொன்றின் ஆரம்ப பங்கு வழங்கள் மீதான முத்திரைத் தீர்வை விளக்களிக்கப்படுதல்.
- 2006ன் 12ம் இலக்க முத்திரைத் தீர்வை (வி‘ட ஏற்பாடுகள்) சட்டம், 2012.12.17 திகதிய 1789/09 ம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - சத்தியக் கடதாசிகள், காப்புறுதி, நொத்தாரிசு ஆணைப்பத்திரம், வியாபாரங்களைக் கொண்டு நடாத்துவதற்கான அனுமதிப் பத்திரம், மதுபான விற்பனைக்கான அனுமதிப்பத்திரம் கடன் அட்டைகள் பயன்பாட்டுக் கொடுப்பனவுக்கான கேள்வி போன்றவற்றுக்கு 2013 வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு முத்திரைத் தீர்வைகளைத் திருத்தியமைப்பதற்காக
- 2006ன் 12ம் இலக்க முத்திரைத் தீர்வை (வி‘ட ஏற்பாடுகள்) சட்டம், 2012.12.18 திகதிய 1789/15 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - வரவு செலவுத் திட்ட முன்மொழிவு 2013 ற்கு .அமைய,. எல்லை வர்த்தக கணக்கு (சிலாஸ் கணக்கு) ஒன்றுக்கு அல்லது அத்தகைய கணக்குகளிலிந்து எவரேனும் ஆள் ஒருவருக்கு ஏதேனும் பங்கு மாற்றல் சாதனப்பத்திதைத்தின் பேரில் முத்திரைத் தீர்வையினை செலுத்துவதனை விட்டும் விலக்களிப்பதற்காக

vii) **2003 ஆம் ஆண்டின் 03ம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் கீழான வர்த்தமானி அறிவித்தல்கள்**

- 2003 ஆம் ஆண்டின் 03ம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 13ம் பிரிவின் கீழான கட்டளை, 2012.05.30 ஆந் திகதிய 1760/11 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - 2011 ஆம் ஆண்டுக்கான இறுதி வரவு செலவுத் திட்ட நிலமை அறிக்கையினை வெளியிடுதல்.
- 2003 ஆம் ஆண்டின் 03ம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 10ம் பிரிவின் கீழான கட்டளை, 2012.06.29 ஆந் திகதிய 1764/20 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - 2012 ஆம் ஆண்டிற்கான அரையாண்டு அரசிறை முகாமைத்துவ பொறுப்பு அறிக்கையினை வெளியிடுதல்.
- 2003ன் 03ம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 4 மற்றும் 7ம் பிரிவுகளின் கீழான கட்டளை, 2012.11.08 ஆந் திகதிய 1783/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - 2013ஆம் ஆண்டிற்கான அரசிறை முகாமைத்துவ அறிக்கையினை வெளியிடுதல்.

2.3.2 இத்திணைக்களத்தினால் 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பாராளுமன்ற சட்ட திருத்தங்கள்.

- 2012 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (திருத்தச்) சட்டம்
- 2012 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டம்
- 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதி (திருத்தச்) சட்டம்
- 2012 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தேசக் கட்டுமான வரி (திருத்தச்) சட்டம்
- 2012 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணம் (திருத்தச்) சட்டம்
- 2012 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்

2.4 **அரசிறைக் கொள்கை தொடர்பாக கௌரவ நிதி, திட்டமிடல் அமைச்சரினால் 2012 ஆம் ஆண்டு அமைச்சரவைக்கு அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.அவ்வாறே, அரசிறைக் கொள்கையுடன் தொடர்புபற்ற அவதானிப்புக்கள் வழங்கப்பட வேண்டிக் காணப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தொடர்பில் அவதானிப்புக்களும் , இத் திணைக்களத்தினால் தயார்படுத்தப்பட்டு கௌ நிதி, திட்டமிடல் அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது.**

2.5 **பல்வேறு வரிகள் தொடர்பான சட்ட மூலங்கள் மற்றும் வர்த்தமானி அறிவித்தல்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தலும் அதனைப் பின்தொடர்ந்த பணிகளையும் மேற்கொள்ளல்.**

- **வரி சட்ட யாப்பினைத் திருத்துதல் தொடர்பில், நிதி திட்டமிடல் அமைச்சின் சட்ட விவகாரத் திணைக்களம் சட்ட வரைஞர் திணைக்களம்,கௌரவ சட்டமா அதிபர், உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் ,அரசாங்க அச்சகம் மற்றும் பாராளுமன்றம் என்பனவற்றுடன் தொடர்புகளை ஏற்படுத்தி, குறித்த பணிகளை நிறைறேற்றுகின்றன.**

- **வரி அல்லது கட்டண மீளமைப்பு தொடர்பிலான வர்தமானி அறிவித்தல்கள் 2012 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டன.**

2.6. **சகல வருமான மூலங்களையும் மீளாய்வுக்குட்படுத்தல், வருமானங்கள் பற்றிய குறித்த தகவல்களைத் திரட்டுதல், வருமான மதிப்பீடு மற்றும் காசுப்பாய்ச்சல் நிலைமைகளை கண்காணித்தல்.**

- 2013 ஆம் ஆண்டிற்கான உத்தேச வருமான மதிப்பீடு, வருமானத் திரட்டல் திணைக்களத்துடன் இணைந்து தயாரிக்கப்படுகின்றது.

- திறைசேரி செயலாளர், திறைசேரி பிரதிச் செயலாளர், திறைசேரித் திணைக்களப் பிரதி நிதிகள் , வருமானம் திரட்டும் உத்தியோகத்தர்கள், மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பங்களிப்புடன் அறசிறைக் கொள்கைக் குழுவினால் 04 கூட்டங்கள நடாத்தப்பட்டுள்ளன.

- வருமானத் திரட்டு அறிக்கை மாதாந்த வருமான அறிக்கை மூலமும் விசேட தகவல்களைப் பெற்றுக் கொள்வதன் மூலமும் மேற்பார்வை செய்யப்பட்டதுடன், கொள்கை ரீதியான தீர்மானங்கள் எடுக்கப்படுவதற்காக செயலாற்றுகை பகுப்பாய்வு செய்யப்படுகின்றது.

2.7 **2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் தொடர்புற்ற அறிக்கைகளை வெளியிடுதல்**

- **வருடாந்த அறிக்கை – 2011**

  2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் நிதியாண்டு முடிவடைந்து 5 மாத காலம் கழிவதற்கு முன்பு பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து பொதுமக்களுக்கு வெளியிடப்பட வேண்டிய இறுதி வரவு செலவுத் திட்ட நிலைமை அறிக்கை, அதாவது 2011 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை 2012 மே மாதத்தில் வெளியிடப்பட்டது.

- **அரையாண்டு அரசிறை நிலைமை குறித்த அறிக்கை – 2012**

  2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட வேண்டிய இவ்வறிக்கை குறித்த ஆண்டின் யூன் மாதத்தின் இறுதித் தினத்தன்று அல்லது ஒதுக்கீட்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டு 6 மாதம் கழிவதற்கு முன்பு ஆகிய இரு காலப் பிரிவுகளின் பின்னர் வரும் நாளுக்கு முன்பதாக ஆண்டு தோறும் வெளியிடப்பட வேண்டும் என்பதுடன், 2012 ஆம் ஆண்டின் அரையாண்டு அரசிறை நிலைமை குறித்த அறிக்கை 2012 யூன் மாதத்தில் வெளியிடப்பட்டது.

- **அரசிறை முகாமைத்துவ அறிக்கை 2013**

  2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 4, 5 மற்றும் 6 ஆவது பிரிவுகளின் கீழ் சமர்ப்பிக்கப்படுகின்ற அரசிறை முலோபாயங்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட அரசிறை முகாமைத்துவ அறிக்கை-2013 , குறித்தத சட்டத்தின் 7, 8 மற்றும் 9 ஆம் பிரிவுகளின் கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வரவு செலவுத் திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை தொடர்பிலான அறிக்கை 2013 ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய அரசிறை முகாமைத்துவ அறிக்கையானது 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் வெளியிடப்பட்டது.

2.8 **மூன்றாம் தரப்பினருக்கு வரி விலக்களிப்புச் செய்ய, மற்றும் பிற்போடுவதற்காக வெளியிடப்படுகின்ற கடிதங்கள் இலங்கைச் சுங்கத் திணைக்களத்திற்கு அனுப்புவதனை இலகுபடுத்தும் வகையில் இணைய சேவையினூடாக அமுல்படுத்தப்படும் “Regulatory Approval Uploading System என**

அறிமுகப்படுத்தப்பட்ட கணணி நிகழ்ச்சித் திட்டம் இலங்கைச் சுங்கத் திணைக்களத்திற்கும் இத்திணைக்களத்திற்கும் இடையே அமுல்படுத்தப்படுகிறது.

3. நிர்வாகமும் கணக்குகளும்

3.1 நிறுவனக் கட்டமைப்பு

அரசிறைக் கொள்கைத் திணைக்களம் 65 அனுமதிக்கப்பட்ட பதவியணியினரைக் கொண்டுள்ளது. அதற்கமைய, பின்வரும் அலுவலர்கள் இத்திணைக்களத்தில் பணியாற்றுகின்றனர்.

பதவியணி விபரம் -2012 (2012.12.31) அன்றுள்ளவாறு

புதவி	அனுமதிக்கப்பட்ட பதவியணி	தற்போதைய பதவியணி	வெற்றிடம்
பணிப்பாளர் நாயகம்	01	01*	---
மேலதிகப் பணிப்பாளர் நாயகம்	01	---	01
பணிப்பாளர் இ.நி.சே.	02	02	--
இ.தி.சே	01	--	01
சிரேஷ்ட பொருளியலாளர்	01	--	01
பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் -இ.நி.சே.	09	06**	03
பிரதிப் பணிப்பாளர் -இ.தி.சே	02	01***	01
பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் - இ.க.சே.	01	01	--
உதவிப் பணிப்பாளர் -இ.தி.சே	02	---	02
பொருளியலாளர்	01	---	01
புள்ளிவிபரவியலாளர்	01	---	01
நிர்வாக உத்தியோகத்தர்	01	01	---
மொழி பெயர்ப்பாளர்	02	01	01
ஆராய்ச்சி உதவியாளர்	06	04	02
அபிவிருத்தி உதவியாளர்	06	02	04
அரச முகாமைத்துவ உதவியாளர்	13	10	03
சாரதிகள்	06	03	03
அலுவலக உதவியாளர்	09	07	02
மொத்தம்	**65**	**39**	**26**

* *இலங்கை மத்திய வங்கியின் பதவி நிலை அலுவலர் ஒருவர் பணிப்பாளர் நாயகமாக இத்திணைக்களத்தில் கடமையாற்றுகிறார்.*

** *பிரதிப் பணிப்பாளராக பணியாற்றும் சிரேஷ்ட மதிப்பீட்டு அலுவலர் ஒருவரின் சேவையினையும் இத்திணைக்களத்திற்குக் கிடைக்கப் பெறுகிறது.*

*** *மேற்படிப்பிற்காக விடுமுறை பெற்றுச் சென்றுள்ளார்.*

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட வரி ஆலோசகர் ஒருவரினது சேவையும் இத் திணைக்களத்திற்குக் கிடைக்கப் பெறுகிறது.

3.2. மனிதவள அபிவிருத்தி

திணைக்களத்தின் பதவியினருக்கு அவர்களின் தொழில்சார் திறமைகள் மற்றும் விடய அறிவு என்பனவற்றினை விருத்திசெய்து கொள்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் வெளிநாட்டுப் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் உள்நாட்டுப் பயிற்சிக் கற்கை நெறிகளில் பங்கேற்கச் செய்யப்பட்டனர். அதனூடாக அவர்களின் வினைத்திறன் பெறுகி திணக்களத்தின் பணிகளை செயற்றிறன்மிக்கதாக மாற்றிக் கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது. பதவியிணருக்காக 2012 இல் வழங்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகள் குறித்த விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

3.2.1 உள்நாட்டுப் பயிற்சிகள்

பெயர்	பதவி	நிகழ்ச்சித் திட்டம் & நிறுவகம்	பயிற்சிக் காலம்
செல்வி.டீ.ஜீ.டப். குணதிலக	வரி ஆலோசகர்	PRAG - நிறுவனம் Introduction to International Financial Reporting Standards	26 யூன் 2012
செல்வி.கே.ஏ.எச்.சி .புபுதுசிறி	உதவிப் பணிப்பாளர்	மிலோதா நிறுவனம் Public Utility Pricing Policies, Issues , Options and Best Practices	26 ஏப்ரல் 2012
		இலங்கை மத்திய வங்கி - International Research Conference	30 நொவெம்பர் 2012
திருமதி. டப்.எல்.பீ. பெர்ணாந்து	உதவிப் பணிப்பாளர்	மிலோதா நிறுவனம் - Economic & Financial Appraisal of Projects	03,10,17,24 பெப்ரவரி, மற்றும் 02,09,16,23 மார்ச் 2012
		மிலோதா நிறுவனம் - Deficit Financing Mechanisms Debt and Debt Management Strategies	26 - 27 யூன் 2012
திருமதி. டப்.எம்.ஏ.விமலஜீவ	உதவிப் பணிப்பாளர்	இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம் - 33rd National Conference of Institute of Chartered Accountants of Sri Lanka	18 - 22 ஒக்தோபர் 2012
திரு.அனுராத திலகரத்ன	உதவிப் பணிப்பாளர்	இலங்கை மத்திய வங்கி - Advance course in MS Excel	02 பெப்ரவரி – 29 மார்ச் 2012

		தேசிய சுவடிகள் கூடம் திணைக்களம் - அரச ஆவண முகாமையும் ஆவணப் பாதுகாப்பு சட்டமும் தொடர்பான ஒரு நாள் பயிற்சிநெறி	08 - யூன் 2012
		PRAG - நிறுவனம் Introduction to International Financial Reporting Standards	26 யூன் 2012
		இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை நிறுவனம் - Future Gov SAARC Summit 2012	18 -19 யூலை 2012
திருமதி.எம்.ஏ.என் ஸீ. பெரேரா	உதவிப் பணிப்பாளர்	இலங்கை மத்திய வங்கி - Applied Econometrics – A Practical Approach Using Econometric(E – Views) Software	18 சனவரி முதல் 13 ஜுன் 2012
		தேசிய திட்டமிடல் திணைக்களம் - Residential Training Programme on Main Streaming (DDR) in Sri Lanka	11 – 12 மே 2012
		மிலோதா நிறுவனம் Deficit Financing Mechanisms Debt and Debt Management Strategies	26 - 27 ஜுன் 2012
		இலங்கை மத்திய வங்கி – International Research Conference	30 நொவெம்பர் 2012
திரு. எஸ்.ஏ.பீ.கே. திஸாநாயக்க	ஆராய்ச்சி உதவியாளர்	களனி பல்கலைக் கழகம் - முதுமானிக் கற்கைநெறி(பொருளியல் விஞ்ஞானம்) - 2011	2012 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை
திருமதி .பீ.எஸ். ஜயசுந்தர.	அபிவிருத்தி உதவியாளர்	மிலோதா நிறுவனம் - Effective Documentation Using MS Word	20- 22 நொவெம்பர் 2012

திருமதி. டப்.எம்.எம். பெரேரா	அரச முகாமைத்துவ உதவியாளர்	மிலோதா நிறுவனம் - Government Payroll Management System	06 - 11 ஒகத்து 2012
திருமதி.டி.பீ. ஆரியதிலக	அரச முகாமைத்துவ உதவியாளர்	திறன் அபிவிருத்தி நிதியம் தனியார் நிறுவனம் - Public Procurement Procedures	29 - 30 நொவெம்பர் 2012
திருமதி.எஸ்.டப். எஸ்.என். திலன்திகா	அரச முகாமைத்துவ உதவியாளர்	திறன் அபிவிருத்தி நிதியம் தனியார் நிறுவனம் - Public Procurement Procedures	29 - 30 நொவெம்பர் 2012
திரு.எம்.எம். குணவர்தன்	அரச முகாமைத்துவ உதவியாளர்	நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் - Transport Management	30 நொவெம்பர் 2012
திருமதி. ஸீ.வை.ரணசிங்ஹ	அரச முகாமைத்துவ உதவியாளர்	மிலோதா நிறுவனம் - Effective Documentation Using MS Word	20 -22 நொவெம்பர் 2012
திரு டீ. டீ. ஏ . சிரிவர்தன	அலுவலக உதவியாளர்	தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் - வேலைத்தள உயர் உற்பத்தித் திறன்	11- 12 ஒக்தோபர் 2012

3.2.2 வெளிநாட்டுப் பயிற்சிகள்/ மாநாடுகள்

பெயர்	**பதவி**	**பயிற்சி பெற்ற நிறுவகமும் நிகழ்ச்சித் திட்டம்**	**பயிற்சிக் காலம்**
திரு.கே.எம்.எம். சிறிவர்தன	பணிப்பாளர் நாயகம்	7th Policy Consultation Forum if the Seoul Initiative Network on Green Growth: The Double Dividend of "Green" and "Economy" to be held in Jeju Special Self- Governing Province – Republic of Korea	30 மே – 01 ஜுன் 2012

		Commonwealth Finance Ministers Meeting and IMF World Bank Annual Meeting – Japan	08-15 ஒக்தோபர் 2012
செல்வி. கே.ஏ.ரம்யா காந்தி	பணிப்பாளர்	Seminar on Macroeconomic Development for Developing Countries – China	06- 26 செத்தம்பர் 2012
		Official Delegation to India	12-15 திசெம்பர் 2012
திருமதி.எம்.ஏ.என் ஸீ. பெரேரா	உதவிப் பணிப்பாளா	Course on Macroeconomic Management and Fiscal Policy (MFP) – India	09-22 செத்தெம்பர் 2012
செல்வி.கே.ஏ.எச்.சி. புதுசிறி	உதவிப் பணிப்பாளர்	IMF – Singapore Training Macroeconomic Forecasting	18-31 மார்ச் 2012
		Design Sequencing and Implementation of Public Financial Management Reforms	09-13 யூலை 2012
திரு.ஏ.டபி.எம்.ஏ. அனுராதா திலகரத்ன	உதவிப் பணிப்பாளர்	Seminar on Macro Fiscal Forecasting and Analysis – Singapore	23-27 யூலை 2012
திரு ஏம்.கே.சீ. சேனாநாயக	உதவிப் பணிப்பாளர்	PHD Programme in Economics at the University of New South Wales - **Australia**	2011 ஜனவரி 11 முதல் 2014 திசெம்பர் 04 வரை.

3.3. நிதி நிருவாகம்

2012 ஆம் ஆண்டில் தலைப்பு இல. 238, நிகழ்ச்சித் திட்டம் 1, கருத்திட்டம் 1 இன் கீழ் இத்திணைக்களத்திற்கு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டினால் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருந்ததுடன், அவ் ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்ட விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.

(i) 2012 வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்திய விதம்

செலவு விபரம்	**2012 மதிப்பீடு ரூபா**	**2012 தேறிய ஒதுக்கீடுகள் ரூபா**	**2012இல் உள்ளவாறான உண்மைச் செலவு ரூபா**
மீண்டெழும் செலவு	**637,700,000**	**636,800,000**	**127,561,376**
ஆள்சார் படிகள்	24,500,000	25,500,000	220,086,172

பிரயாணச் செலவுகள்	650,000	2,000,000	1,691,125
வழங்கல்கள்	2,250,000	2,265,000	2,072,889
பராமரிப்புச் செலவுகள்	2,750,000	2,890,000	1,236,129
ஒப்பந்த சேவைகள்	607,350,000	603,795,000	100,160,272
மாற்றல்கள்	200,000	350,000	314,789
மூலதனச் செலவு	**700,000**	**1,600,000**	**1,142,706**
புனரமைப்பும் மேம்படுத்தலும்	100,000	100,000	68,622
பற்றுக்கள்	400,000	800,000	717,834
மூலதன மாற்றல்கள்	-	-	-
ஆற்றல் விருத்தி	200,000	700,000	356,250
முழு மொத்தம்	**638,400,000**	**638,400,000**	**128,704,082**

(ii) அரசாங்க ஊழியர்களின் முற்பணக் கணக்கு

2012 ஆம் ஆண்டுக்காக இத்திணைக்களத்தின் அரச உத்தியோகத்தர்களின் 'பி' கணக்கின் விபரங்கள் கீழ்க்காணுமாறு அமையும்:

விபரம்	அனுமதித்த எல்லை ரூபா	உள்ளபடியான எல்லை ரூபா
1. ஆகக் கூடுதலான செலவின எல்லை	2,600,000.00	2,069,915.63
2. ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை	1,000,000.00	1,653,258.58
3. ஆகக் கூடுதலான வரவு மீதி எல்லை	10,000,000.00	7,151,435.89

(iii). கணக்காய்வு விசாரணை

2012 ஆம் ஆண்டில் நிதி, திட்டமிடல் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் 05 கணக்காய்வு ஐய்ய வினாக்களும், கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்தினால் 05 கணக்காய்வு ஐய்ய வினாக்களும் இத் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளதுடன் அவற்றிற்கு உரிய காலத்தில் பதிலளிக்கப்பட்டுள்ளன.